19th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: தஞ்சை ஜில்லாவில் மற்ற வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இதே போன்ற பணிகள் செய்தார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் எனக்கு இல்லை.

கிராம உத்தியோகஸ்தர்கள் (பயணப்படி).

* 233 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரி வசூல் சம்பந்தமாக அடிக்கடி கூட்டப்படும் கூட்டங்களுக்குப் போய்வர கிராம அதிகாரிகளுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா ?

(இ) அப்படியானால், எவ்வளவு ?

(உ) பஞ்சாயத்து வரியை வசூலிக்க கிராமத் தலைவர்களிடம் ஒப்படைத்த பிறகுதான் படி கொடுக்கப்படுகிறதா ?

(எ) முன்பிருந்தே கொடுக்கப்படுகிறதென்றால் இப்போது அவர்களுக்கு அதிகமான வேலையும் அடிக்கடி ரெவின்யூ அதிகாரிகள் கூட்டுகின்ற கூட்டங்களுக்குப் போய்விடுவதால் அதற்கு அதிகப்படியாக பிரயாணப்படியும் இனிமேலாவது கொடுக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து வரும் கிராம அதிகாரிகளுக்கு பஸ் அல்லது ரயில் கட்டணமும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வெளியே இருந்தால், தினசரிப் படி ரூ. 1-25 ந.பை. வீதம் கொடுக்கப்படுகிறது.

(உ) ஆம்.

(எ) எழவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம முன்சீப்கள் தாங்களே நேரில் போகாமல் சிப்பந்திகளின் மூலம் வரிவசூலான தொகையை அனுப்பினால், அந்தத் தொகையை வாங்கிக்கொள்ள மறுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் இல்லை.

Allotment of funds to panchayats.

* 234 Q.—Sri V. S. S. Mani: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) on what basis funds are allotted to panchayats through panchayat unions; and

(b) whether population is one of the factors taken into account?

The Hon. Sri S. M. A. Majid: (a) & (b) A statement[a] is placed on the Table of the House.

---

[a] Printed as Appendix I on page 306–308.